# டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

*(சிங்கப்பூரில் நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்டது: 199901152M)*

# மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

## சுருக்கமான நிதிநிலை விவரம்

31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் (குழுமம்) மற்றும் டிபிஎஸ் பேங்க் லிமிடெட் (வங்கி) ஆகியவற்றின் முழு நிதிநிலை அறிக்கைகளின் சுருக்கம் மட்டும் பின்வரும் நிதிநிலைத் தகவல்களில் இடம்பெறும். குழுமம் மற்றும் வங்கியின் நிதிமுடிவுகள் மற்றும் நிதிநிலைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள இதில் போதிய விவரங்கள் அடங்கியிருக்கவில்லை. கூடுதல் தகவலுக்கு, தணிக்கையிடப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் முழுமையான தொகுப்பையும், தணிக்கையாளரின் அறிக்கைகளையும், இயக்குநர்களின் அறிக்கைகளையும் தயவுசெய்து பார்க்கவும். இவை www.dbs.com/investors என்ற டிபிஎஸ் இணையத்தளத்தில் கிடைக்கின்றன.

# சுருக்கமான நிதிநிலை விவரம் உள்ளடக்கங்களின் அட்டவணை

## டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

### சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கை 3

### நிதிநிலை அறிக்கைகள்
தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட வருவாய் அறிக்கை 10
தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை 11
தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலை அறிக்கை 12
தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை 13
தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை 14

### இதர விவரங்கள்
1. மூலதன வளம் 15
2. லாப ஈவுகள் 15
3. ஊக்கத்தொகை வெளியீடு 15
4. மூன்று பில்லியன் சிங்கப்பூர் டாலர் பங்குகளைத் திரும்பப் பெறும் திட்டத்தை நிறுவுதல் 15

## டிபிஎஸ் பேங்க் லிமிடெட்

### நிதிநிலை அறிக்கைகள்
தணிக்கையிடப்பட்ட வருவாய் அறிக்கை 16
தணிக்கையிடப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை 17
தணிக்கையிடப்பட்ட இருப்புநிலை அறிக்கை 18

### இதர விவரங்கள்
1. டிபிஎஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் மூலதன வளம் 19

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

# சுயேச்சையான தணிக்கையாாளரின் அறிக்கை

## டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் உறுப்பினர்களுக்கானது

### நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கை பற்றிய அறிக்கை

**எங்கள் கருத்து**
எங்கள் கருத்துப்படி, இணைக்கப்பட்டுள்ள டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (நிறுவனம்) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (குழுமம்) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளும் நிறுவனத்தின் இருப்புநிலை அறிக்கையும் சிங்கப்பூர் நிறுவனங்கள் சட்டம் 1967 (சட்டம்) படியும் சிங்கப்பூர் நிதிநிலைத் தாக்கல் தரங்கள் (அனைத்துலகம்) ["SFRS(I)s"] விதியின்படியும் முறையாகத் தயாரிக்கப்பட்டு, 31 டிசம்பர் 2024-இல் நிலவிய குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலையையும் நிறுவனத்தின் நிதிநிலையையும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் செயல்திறன், ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்றம், ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்கம் ஆகியவற்றையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன.

**நாங்கள் தணிக்கை செய்தவை**
நிறுவனம் மற்றும் குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகளில் இருப்பவை:

- 31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாய் அறிக்கை;
- 31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை;
- 31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமம் மற்றும் நிறுவனத்தின் இருப்புநிலை அறிக்கை;
- அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை;
- அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப்புழக்க அறிக்கை; மற்றும்
- குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கை விவரங்கள் உட்பட நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**கருத்துக்கான அடிப்படை**
நாங்கள் சிங்கப்பூர் தணிக்கைத் தரநிலைகளுக்கு ("SSAs") ஏற்ப தணிக்கை செய்தோம். அந்தத் தரநிலைகளின் அடிப்படையிலான எங்களது பொறுப்புகள், எங்களது அறிக்கையின் நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள் என்ற பிரிவில் மேலும் அதிகமாக விவரிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் எங்கள் கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமானவையாகவும் பொருத்தமானவையாகவும் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

**சுதந்திரம்**
நாங்கள் கணக்கியல் மற்றும் நிறுவனக் கட்டுப்பாட்டு ஆணையம் ("ACRA") வழங்கும் நிபுணத்துவ நடத்தைக் குறியீடு மற்றும் பொதுக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான நெறிமுறைகள் (ACRA குறியீடு) ஆகியவற்றின்படியும் சிங்கப்பூரில் நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்கு அவசியமான நெறிமுறை நிபந்தனைகளின்படியும், குழுமத்துடன் தொடர்பில்லாத சுதந்திரமான அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகளுக்கும் ACRA குறியீட்டுக்கும் ஏற்ப எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம்.

## எங்கள் தணிக்கை அணுகுமுறை

**மேலோட்டம்**

**குறிப்பிடத்தக்க தன்மை**

- குழுமத்தின் ஒட்டுமொத்தக் குறிப்பிடத்தக்க தன்மையைக் குழுமத்தின் வரிக்கு முந்தைய லாபத்தில் 5%-இன் அடிப்படையில் நிர்ணயித்தோம்.

**குழும வரையறை**

- டிபிஎஸ் பேங்க் லிமிடெட்டின் சிங்கப்பூர் நடவடிக்கைகள் மற்றும் டிபிஎஸ் குரூப் (ஹாாங்காாங்) லிமிடெட் ("முக்கிய உட்கூறுகள்") ஆகியவற்றின்மீது முழு அளவிலான தணிக்கை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன
- டிபிஎஸ் பேங்க் லிமிடெட்டின் ஹாங்காங், தைபே, லண்டன் கிளைகளையும், டிபிஎஸ் பேங்க் (சைனா) லிமிடெட், 'பி.டி பேங்க் டிபிஎஸ் இந்தோனேசியா', டிபிஎஸ் பேங்க் (தைவான்) லிமிடெட், டிபிஎஸ் பேங்க் இந்தியா லிமிடெட் ஆகிய துணை நிறுவனங்களையும் உட்கூறு நிறுவனங்களாக (மற்ற உட்கூறுகள்) அடையாளம் கண்டோம். இங்குதான் குழுமத்தோடு ஒப்பிடுகையில் சில கணக்கு இருப்புகள் குறிப்பிடத்தக்க அளவிலானதாகக் கருதப்பட்டன. ஆகவே, இந்த உட்கூறுகளின் குறிப்பிடத்தக்க அளவிலான கணக்கு இருப்புகள் மீது தணிக்கையில் குறிப்பிட்டுள்ள செயல்முறைகள் செய்யப்பட்டு, போதுமான மற்றும் தகுந்த தணிக்கைச் சான்று பெறப்பட்டது.

**முக்கியத் தணிக்கை விவகாரங்கள்**

- வாடிக்கையாளர்களின் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குகள்
- கடன் இழப்புகளுக்கான பொதுவான ஒதுக்குகள் (1 மற்றும் 2-ஆம் நிலை எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு)
- நியாயமான மதிப்பில் வசமிருக்கும் நிதிக்கருவிகளின் மதிப்பீடு

எங்கள் தணிக்கை வடிவமைப்பின் ஒரு பகுதியாக, குறிப்பிடத்தக்க தன்மையை நிர்ணயித்து, இணைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவிலான விவரப்பிழைகளின் இடர்கோள்களை மதிப்பிட்டோம். குறிப்பாக, நிர்வாகம் செய்த அகச்சார்நிலைத் தீர்ப்புகளைப் பரிசீலித்தோம்; எடுத்துக்காட்டாக, முக்கியமான கணக்கீட்டு மதிப்பிடலைப் பொறுத்தவரை, ஊகங்கள் செய்வது மற்றும் நிச்சயமற்ற வருங்கால நிகழ்வுகளைக் கருத்தில்கொள்வது. எங்களது எல்லாத் தணிக்கைகளையும் போலவே, உள் கட்டுப்பாடுகள் மீதான நிர்வாகத்தின் ஆதிக்க இடர்கோளையும் நாங்கள் ஆய்ந்தோம், மோசடி காரணமாக, குறிப்பிடத்தக்க அளவிலான விவரப்பிழைக்கான இடரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாரபட்சத்துக்குச் சான்றுகள் உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்வதும் இதில் அடங்கும்..

### குறிப்பிடத்தக்க தன்மை

எங்கள் தணிக்கையின் வரையறை, எங்களது குறிப்பிடத்தக்க தன்மையைச் செயல்படுத்துதல் கருத்தாக்கம் மூலம் நிர்ணயிக்கப்பட்டது, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் விவரப் பிழைகள் இல்லை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டைப் பெறும் வகையில் தணிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. விவரப்பிழைகள் மோசடியால் அல்லது பிழையால் நேரலாம். அவை தனிப்பட்ட முறையில் அல்லது மொத்தமாக, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் பயனாளர்கள் எடுக்கும் பொருளியல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நியாயமாக எதிர்பார்க்கப்படக்கூடிய நிலையில் அவை குறிப்பிடத்தக்க தன்மை கொண்டவையாகக் கருதப்படும்.

எங்கள் நிபுணத்துவத் தீர்ப்புகளின் அடிப்படையில், ஒட்டுமொத்தக் குழுமத்தின் ஒட்டுமொத்த நிதி அறிக்கைகளின் குறிப்பிடத்தக்க தன்மை உட்பட, குறிப்பிடத்தக்க தன்மைக்கான குறிப்பிட்ட சில அளவீடுகளைப் பின்வரும் அட்டவணையில் உள்ளபடி நாங்கள் நிர்ணயித்தோம். இவை, மற்றத் தரப் பரிசீலனைகளுடன் சேர்ந்து, எங்கள் தணிக்கையின் வரையறை, தணிக்கை நடைமுறைகளின் இயல்பு, காலம், அளவு ஆகியவற்றை நிர்ணயிக்கவும், அத்துடன் விவரப்பிழைகளின் விளைவைத் தனிப்பட்ட முறையிலும் ஒட்டுமொத்த நிதி அறிக்கையின் அடிப்படையிலும் மதிப்பிடவும் எங்களுக்கு உதவின.

| | |
|---|---|
| **குழுமத்தின் ஒட்டுமொத்தக் குறிப்பிடத்தக்க தன்மையை நாங்கள் எவ்வாறு நிர்ணயித்தோம்** | குழுமத்தின் வரிக்கு முந்தைய லாபத்தில் 5% |
| **பயன்படுத்திய அளவீட்டுக் குறிகளுக்கான அடிப்படைக் காரணங்கள்** | • எங்கள் கண்ணோட்டத்தின்படி, குழுமத்தின் செயல்பாட்டை அளவிட ஆகப்பொதுவாகப் பயன்படுத்தப்படும் அளவீட்டுக் குறியாகக் கருதிய "வரிக்கு முந்தைய லாபத்தை" நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.<br>• எங்கள் நிபுணத்துவத் தீர்ப்பு அடிப்படையில் 5%-ஐத் தேர்ந்தெடுத்தோம். பொதுவாக ஏற்கப்படும் லாபம் சார்ந்த அளவீடுகளுக்கு இது உட்பட்டிருப்பதையும் கவனத்தில் கொண்டோம். |

எங்கள் தணிக்கையைச் செய்கையில் குழுமத்தின் முக்கிய உட்கூறுகளுக்கும் மற்ற உட்கூறுகளுக்கும் குறிப்பிடத்தக்க தன்மை நிலைகளை வரையறுத்தோம். இவை குழுமத்தின் ஒட்டுமொத்தக் குறிப்பிடத்தக்க தன்மையைவிடக் குறைவு.

**தணிக்கை வரையறையை நாங்கள் உருவாக்கிய விதம்**
நாங்கள் குழுமத்தின் அமைப்புமுறை, கணக்கியல் நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள், குழுமம் செயல்படும் தொழிற்துறை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, நிதிநிலை அறிக்கைகள் குறித்து ஒட்டுமொத்தக் கருத்து தெரிவிப்பதற்குப் போதிய பணி மேற்கொள்ளும் வகையில் எங்கள் தணிக்கையின் வரையறையை வகுத்தோம். குழுமத்தின் நிதிநிலை அறிக்கைத் தாக்கல் நடைமுறை அதன் தகவல் தொழில்நுட்ப (IT) இயங்குமுறைகளைச் சார்ந்திருக்கிறது. எங்களது தணிக்கை வரையறையில், நிதிநிலை அறிக்கைத் தாக்கலுக்குத் தேவைப்பட்ட முக்கிய நிதி விவரங்கள் தகவல் தொழில்நுட்ப (IT) இயங்குமுறைகளில் நேர்மையாகப் பரிசீலிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் கட்டுப்பாடுகளின் செயல்திறனைச் சோதிப்பதும் உள்ளடங்கும்.

ஒட்டுமொத்தக் குழுமத்தின் தணிக்கை அணுகுமுறையை நிலைநாட்ட, குழுமம் முழுவதிலும் எங்களாலோ அல்லது இந்த வட்டாரங்கள் ஒவ்வொன்றின் உள்ளூர்ச் சட்டத்துக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் பழக்கப்பட்ட, எங்கள் கட்டளையின்கீழ் செயல்படும் மற்ற PwC கட்டமைப்பு நிறுவனங்களாலோ (“உட்கூறுகளின் தணிக்கையாளர்கள்”) மேற்கொள்ளப்பட வேண்டிய தணிக்கை நடைமுறைகளின் அளவை நாங்கள் நிர்ணயித்தோம். உட்கூறுகளின் தணிக்கையாளர்கள் மேற்கொண்ட பணிகளில், ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கைகள் குறித்த எங்கள் கருத்துக்குப் போதிய பொருத்தமான தணிக்கை ஆதாரம் பெறப்பட்டதாகத் தீர்மானிப்பதற்குத் தணிக்கை நடைமுறைகளில் நாங்கள் எவ்வளவு ஈடுபாடு கொள்ளவேண்டும் என்பதை நாங்கள் நிர்ணயித்தோம்.

**முக்கியத் தணிக்கை விவகாரங்கள்**
முக்கியத் தணிக்கை விவகாரங்கள் என்பவை, எங்களது நிபுணத்துவ மதிப்பீட்டின்படி 31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற நிதியாண்டின் நிதிநிலை அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்தத் தணிக்கையின் அடிப்படையில் இவ்விவகாரங்கள் ஆராயப்பட்டு, அதற்கேற்ப எங்கள் கருத்தை வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்த தனியொரு கருத்தை நாங்கள் வெளியிடவில்லை.

| முக்கியத் தணிக்கை விவகாரம் | முக்கியத் தணிக்கை விவகார த்தை எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது |
|---|---|
| **வாடிக்கையாளர்களின் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குகள்**<br><br>31 டிசம்பர் 2024 நிலவரப்படி, குழுமத்தின் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குகள் $2,393 மில்லியனாக இருந்தன, இதில் பெரும்பகுதிகள் கழக வங்கிக் குழும (“IBG”) வாடிக்கையாளர்களுடன் தொடர்புடையவை. சிறப்பு ஒதுக்குகள் கடன் சேதமடைந்த வெளிப்பாடுகளுக்கான நட்ட ஒதுக்குகளைக் குறிக்கின்றன (அதாவது நிலை 3, SFRS (I) 9-இன் படி) சேதமடையாத வெளிப்பாடுகளின் (அதாவது நிலை 1 மற்றும் நிலை 2) எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் (“ECL”) ‘கடன் இழப்புகளுக்கான பொது ஒதுக்குகள்’ என முக்கியத் தணிக்கை விவகாரத்தின்கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.<br><br>குறைப்பாடு பற்றிய நிர்வாகத்தின் மதிப்பீடு இயல்பாகவே அகநிலை சார்ந்தது என்பதாலும் குறைப்பாடு ஏற்பட்ட நேரம் மற்றும் அதன் அளவு ஆகியவற்றின் மதிப்பீடு என்பது குறிப்பிடத்தக்க அளவு தீர்ப்பு அடிப்படையிலானது என்பதாலும் நாங்கள் இந்தப் பகுதியில் கவனம் செலுத்தினோம். இதில் உள்ளடங்குவன:<br><br>• கடன்சேத இழப்புக்குச் (கடன்பெறுபவர்களின் எதிர்கால லாபத்தன்மை மற்றும் பிணைப்பொருளின் எதிர்பார்க்கப்படும் கைகூடத்தக்க மதிப்பு உட்பட) சான்றுகள் உள்ள IBG வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குக் கணக்கீட்டின் அடிப்படையியான முதன்மை ஊகங்கள்; மற்றும்<br>• MAS அறிவிப்பு 612-க்கு (“MAS 612”) ஏற்ப கடன்கள் மற்றும் முன்பணங்களின் வகைப்பாடு.<br><br>(நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் 3 மற்றும் 18-ஐப் பார்க்கவும்.) | கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குகள் மீதான முக்கியக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பை நாங்கள் மதிப்பிட்டு, அவற்றின் செயல்பாட்டுத் திறன்களையும் மதிப்பீடு செய்தோம். இந்தக் கட்டுப்பாடுகளில் உள்ளடங்குவன:<br><br>• குழுமத்தின் கடன் இடர்கோள் குழுவினரின் கடன் இடர்கோள் மேற்பார்வை;<br>• சரியான நேரத்தில் கடன் இடர்கோளை நிர்வாக மதிப்பாய்வு செய்தல்;<br>• கண்காணிப்புப் பட்டியல் அடையாளம் காணப்பட்டு கண்காணிக்கப்படல்;<br>• சேதார நிகழ்வுகள் உரிய காலத்தில் அடையாளம் காணப்படுதல்;<br>• MAS 612-க்கு ஏற்ற வகையில் கடன்கள் மற்றும் முன்பணங்களின் வகைப்பாடு; மற்றும்<br>• பிணைக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.<br><br>எங்கள் தணிக்கை நோக்கங்களுக்காக இந்தக் கட்டுப்பாடுகளைச் சார்ந்திருக்கலாம் என்று நாங்கள் தீர்மானித்தோம்.<br><br>கடன்களும் முன்பணங்களும் MAS 612 அடிப்படையில் வகைப்பாடு செய்யப்பட்டதா என்பதை மதிப்பிடுவதற்காக IBG வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களின் மாதிரிகளை நாங்கள் தேர்ந்தெடுத்தோம். சேத இழப்புக்கான சான்றுகள் இருந்த நிலையில் அது உரிய காலத்தில் அடையாளம் காணப்பட்டதா என்பதை நாங்கள் மதிப்பீடு செய்தோம். பொருந்துமிடங்களில், சகிப்புத்தன்மை எவ்வாறு கருதப்பட்டது என்பதும் இதிலடங்கும்.<br><br>தேர்ந்தெடுக்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்களின் மாதிரிகளில் சேதாரம் அடையாளம் காணப்பட்டபோது எங்கள் பணி பின்வருவனவற்றை உள்ளடக்கியது:<br><br>• கடன்பெற்றவர் தொடர்பான அண்மை முன்னேற்றங்கள் கருத்தில் கொள்ளப்படுதல்;<br>• நிர்வாகம் தயாரித்த வருங்கால ரொக்கப்புழக்க முன்னுரைப்புகளை ஆராய்தல், மீட்புகளின் அளவு மற்றும் அதன் நேரம் தொடர்பான முக்கிய அனுமானங்கள் இதில் உள்ளடங்கும்; |

| முக்கியத் தணிக்கை விவகாரம் | முக்கியத் தணிக்கை விவகார த்தை எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது |
|---|---|
| **வாடிக்கையாளர்களின் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குகள் (தொடர்ச்சி)** | • பிணை மதிப்பீட்டையும் மற்றவகை பணம் திருப்பிச்செலுத்தும் ஆதாரங்களையும் ஒப்பிட்டு, வெளிப்புறச் சான்றுக்கு எதிராகக் கடன்சேதக் கணக்கீட்டைச் சரிபார்ப்பது, இதில் சுயேச்சையான மதிப்பீட்டு அறிக்கைகளும் அடங்கும்.<br>• நிர்வாகத்தின் ஊகங்களை எதிராய்வு செய்தல்; மற்றும்<br>• கணக்கீடுகளைச் சோதித்தல்.<br><br>நிர்வாகத்தால் பலவீனமானவர்களாக அடையாளம் காணப்படாத IBG வாடிக்கையாளர்களுடைய செயல்படும் கடன்கள் மற்றும் முன்பணங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளுக்கு, அவற்றின் வகைப்பாடு குறித்த நிர்வாகத்தின் அனுமானங்களை, கடன்பெற்றவர் தொடர்பில் கிடைக்கும் வெளிப்புற ஆதாரங்களைப் பயன்படுத்தி, நாங்கள் மதிப்பீடு செய்தோம்.<br><br>மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில், கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான மொத்தச் சிறப்பு ஒதுக்கல் பொருத்தமானது என்று நாங்கள் மதிப்பிட்டோம். |
| **கடன் இழப்புகளுக்கான பொதுவான ஒதுக்குகள் (1 மற்றும் 2ஆம் நிலை எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு)**<br><br>SFRS(I) 9 நிதிக் கருவிகளுக்கு ["SFRS(I) 9"] எதிர்காலப் பொருளாதார நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் எதிர்காலத் தகவல்களைக் கணக்கில் எடுத்துக்கொள்கிற ஒரு ECL குறைப்பாட்டு மாதிரி தேவைப்படுகிறது, எதிர்காலக் காலக்கட்டங்களில் ECL-ஐ மதிப்பிடுவதில், குறிப்பிடத்தக்க அளவிலான முன்னோக்குத் தீர்ப்பு தேவைப்படுகிறது.<br><br>நாங்கள் சேதாரமற்ற வெளிப்பாடுகளுக்குக் குழுமம் அளவிட்ட பொது ஒதுக்குகளில் ($3,969 மில்லியன்) கவனம் செலுத்தினோம். இதில் 'நிலை 1' வெளிப்பாடுகளும் (கடன் இடர்கோளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லாதது) 'நிலை 2' வெளிப்பாடுகளும் (கடன் இடர்கோளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உடையது) உள்ளடங்கும். குழுமத்தால் செயல்படுத்தப்பட்ட ECL கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க தீர்ப்புகளும் ஊகங்களும் உள்ளன, அவை மற்றவற்றுடன் தொடர்புடையன:<br><br>• குழுமத்தின் பேஸல் கடன் மாதிரியமைப்புகள் மற்றும் அளவுருக்களில் சரிகட்டல்கள்;<br>• முன்னோக்குப் பார்வை மற்றும் பெரும்-பொருளியல் தகவல்களின் பயன்பாடு;<br>• சுழலும் கடன் வசதிகளின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்திற்கான மதிப்பீடுகள்;<br>• கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் மதிப்பீடு; மற்றும்<br>• ECL மாதிரிகளில் உள்ள வரம்புகளைக் கணக்கிடுவதற்காகச் செய்யப்படும் மாதிரிக்குப் பிந்தைய சரிசெய்தல்கள்.<br><br>(நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் 3 மற்றும் 11-ஐப் பார்க்கவும்.) | 31 டிசம்பர் 2024 அன்று நிலவிய சில்லறை மற்றும் சில்லறை அல்லாத தொழிற்பட்டியல்களின் நிலை 1 மற்றும் நிலை 2 ECL தொடர்பிலான நிர்வாகத்தின் ஊகங்களையும் மதிப்பீடுகளையும் நாங்கள் கூர்ந்து ஆராய்ந்தோம். இதில் ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட செயல்முறைகளில் செய்யப்பட்ட செம்மைப்படுத்தலை மதிப்பிடுவதும், இடர்க் கண்ணோட்டத்தில் செய்யப்பட்ட மாற்றங்களைக் கணக்கிடுவதும் அடங்கும்.<br><br>நாங்கள் பின்வருவனவற்றில் கவனம் செலுத்தி, முக்கியக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் செயல்திறனையும் மதிப்பீடு செய்தோம்:<br><br>• மாதிரிக்குப் பின்னான சரிசெய்தல்கள் உட்பட, சில வருங்கால பெரும்-பொருளியல் தொடர்பான ஊகங்களை மதிப்பாய்வு செய்து அங்கீகரிப்பதில் நிர்வாகக் குழுக்களின் ஈடுபாடு;<br>• ECL கணக்கீடுகளில் வெளித்தரப்பு மற்றும் உட்தரப்புத் தரவு உள்ளீடுகளின் முழுமை மற்றும் துல்லியம்; மற்றும்<br>• அளவு மற்றும் தரத் தூண்டுதல்களின் அடிப்படையில் 1 மற்றும் 2ஆம் நிலைகளுக்கு வெளிப்பாடுகளை ஒதுக்கியதன் துல்லியத்தன்மை மற்றும் தக்ககாலத்தன்மை.<br><br>எங்கள் தணிக்கை நோக்கங்களுக்காக இந்தக் கட்டுப்பாடுகளை சார்ந்திருக்கலாம் என்று நாங்கள் தீர்மானித்தோம்.<br><br>ஒவ்வோர் ஆண்டும் குழுமத்தின் உள்-வல்லுநர்கள் குழுமத்தின் ECL கணக்கீட்டு முறைகள் மற்றும் ஊகங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களின் மாதிரிச் சரிபார்த்தலைச் சார்பற்ற முறையில் தொடர்ந்து செய்கிறார்கள். எங்கள் பணியின் ஒரு பகுதியாக அவற்றின் முடிவுகளை நாங்கள் சரிபார்த்தோம்.<br><br>வழிமுறைகளும் மதிப்பீடுகளும் பொருத்தமானவையா என்பதை மதிப்பிடுவதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் வகைப்பட்டியலின் ECL-ஐயும் நாங்கள் மதிப்பாய்வு செய்தோம்.<br><br>எங்கள் பணியின் போது, மாதிரிக்குப் பின்னான சரிசெய்தல்களுக்கு அடிப்படையான கணக்கீட்டையும் காரணத்தையும் நாங்கள் மதிப்பிட்டோம். சில வருங்காலப் பொருளாதார உள்ளீடுகளின் நியாயத்தன்மையையும், ஒட்டுமொத்த ECL வெளியீட்டையும் நாங்கள் மதிப்பிட்டோம். |

| முக்கியத் தணிக்கை விவகாரம் | முக்கியத் தணிக்கை விவகார த்தை எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது |
|---|---|
| **கடன் இழப்புகளுக்கான பொதுவான ஒதுக்குகள் (1 மற்றும் 2ஆம் நிலை எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு) (தொடர்ச்சி)** | ஒட்டுமொத்தமாக, சேதாரமற்ற வெளிப்பாடுகளுக்கு ECL கணக்கிட குழுமம் கையாண்ட கணக்கீட்டு முறைகளும் ஊகங்களும் பொருத்தமானது என்று நாங்கள் முடிவு செய்தோம். |
| **நியாயமான மதிப்பில் வசமிருக்கும் நிதிக் கருவிகளின் மதிப்பீடு**<br><br>குழுமத்தின் வசமிருக்கும் நியாயமான மதிப்பிலான நிதிக்கருவிகள் என்பன வருவித்த சொத்துகள் மற்றும் பொறுப்புகள், வர்த்தகப் பங்குப் பத்திரங்கள், குறிப்பிட்ட சில கடன் கருவிகள் மற்றும் நியாயமான மதிப்பிலான இதரச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகும்.<br><br>குழுமத்தின் நிதி முக்கியத்துவம், அடிப்படை வணிகப்பொருள்களின் தன்மை மற்றும் நியாயமான மதிப்பைத் தீர்மானிக்கும் மதிப்பீடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நிலை 2 மற்றும் நிலை 3 நிதிக் கருவிகளின் மதிப்பீட்டை ஒரு முக்கியத் தணிக்கை விவகாரமாகக் கருதினோம்.<br><br>நியாயமான மதிப்பை நிர்ணயிக்கும்போது, கடன் இடர்ப்பாடு, நிதியளிப்புச் செலவுகள், ஏலத்தொகை - குத்தகைவிலை வேறுபாடுகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில், அளவுரு மற்றும் மாதிரி இடர் வரம்புகளை அங்கீகரிக்க நிர்வாகம் சரிசெய்தல்களையும் செய்கிறது. இந்தச் சரிசெய்தல்களில் சிலவற்றைக் கணக்கிடுவதற்கான வழிமுறை தொடர்ந்து மாறிக்கொண்டுவருகிற போதிலும் இது வங்கித் துறையுடன் பரவலாக ஒத்துப்போகிறது,<br><br>(நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 3 மற்றும் 40-ஐப் பார்க்கவும்.) | குழுமத்தின் நிதிக்கருவிகளின் மதிப்பீட்டுச் செயல்முறைகள் மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பை மதிப்பிட்டு, அவற்றின் செயல்திறனையும் நாங்கள் சோதித்தோம். இவற்றில் பின்வருவனவற்றின் மீதான கட்டுப்பாடுகள் அடங்கும்:<br><br>• நிர்வாகம் புதிய மாதிரியமைப்புகளில் செய்யும் சோதனை, அங்கீகரிப்பு மற்றும் நடப்பிலுள்ள மாதிரியமைப்புகளில் செய்யும் மறுமதிப்பீடு;<br>• மதிப்பீட்டு மாதிரிகளில் விலை நிர்ணயத் தரவு உள்ளீடுகளின் முழுமைத்தன்மை மற்றும் துல்லியம்;<br>• பிணைத் தகராறுகளைக் கண்காணித்தல்; மற்றும்<br>• குழுமச் சந்தை மற்றும் பணமாக்கல் இடர்ப்பாட்டுக் குழு மற்றும் குழும மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றால் செய்யப்படும் மதிப்பீட்டுச் செயல்முறைகள் (வழிப்பொருள் மதிப்பீட்டைச் சரிகட்டல் உட்பட) மீதான நிர்வாகத்தின் வழிமுறைகள் மற்றும் கண்காணிப்பு.<br><br>எங்கள் தணிக்கை நோக்கங்களுக்காக இந்தக் கட்டுப்பாடுகளைச் சார்ந்திருக்கலாம் என்று நாங்கள் தீர்மானித்தோம்.<br><br>மேலும், நாங்கள்:<br>• எங்களது சொந்த வல்லுநர்களைப் பணியமர்த்தி குழுமத்தின் மாதிரியமைப்புகளையும் உள்ளீட்டு மூலங்களையும் பயன்படுத்தி, குழுமத்தின் நிலை 1 மற்றும் நிலை 2 நிதிக் கருவிகளின் மாதிரிக்கூறுக்கான நியாயமான மதிப்பின் சுயேச்சையான மதிப்பீட்டைத் தீர்மானித்தோம். இவற்றை குழுமத்தின் நியாயமான மதிப்பின் கணக்கீடுகளுடன் ஒப்பிட்டு, தனிப்பட்ட குறிப்பிடத்தக்கதன்மை மதிப்பீட்டு வேறுபாடுகள் அல்லது அமைப்புமுறையான சார்புநிலைகளை மதிப்பிட்டோம்;<br>• பயன்படுத்தப்பட்ட கணக்கு முறைமைகளின் நியாயமான தன்மையையும், குறிப்பிடத்தக்க கண்டுணர முடியாத மதிப்பீட்டு உள்ளீடுகளைக் கொண்ட நிதிக்கருவி மதிப்பீடுகளின் மாதிரிக்கூறுக்காகச் செய்யப்பட்ட ஊகங்களையும் (நிலை 3 கருவிகள்) பரிசீலித்தோம்;<br>• பொருத்தமற்ற மதிப்பீடுகளின் சாத்தியமான குறிகாட்டிகளை அடையாளம் காண, பிணைத் தகராறுகளில் நடைமுறைகளைச் செயல்படுத்தினோம்;<br>• கிடைக்கக்கூடிய சந்தைத் தரவு மற்றும் தொழில்துறை போக்குகளைக் கருத்தில் கொண்டு, உள்ளீடுகளைச் சோதித்து, நியாயமான மதிப்பு சரிசெய்தல்களுக்கான வழிமுறையை மதிப்பிட்டோம்; மற்றும்<br><br>ஒட்டுமொத்தமாக, நிலை 2 மற்றும் நிலை 3 நிதிக் கருவிகளின் மதிப்பீடு நியாயமான விளைவு வரம்புகளுக்குள் இருப்பதாக நாங்கள் கருதினோம். |

## இதர விவரங்கள்

இதர விவரங்களுக்கு நிர்வாகம் பொறுப்பாகும். இதர விவரங்களில் இந்தத் தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்கு முன்னர் நாங்கள் பெற்ற இயக்குநர்களின் அறிக்கையும் (ஆனால் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் எங்கள் தணிக்கையாளர் அறிக்கை ஆகியவை உள்ளடங்காது), இத்தேதிக்குப் பிறகு எங்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் ஆண்டு அறிக்கையின் இதரப் பகுதிகளும் ("இதரப் பகுதிகள்") உள்ளடங்கும்.

நிதிநிலை அறிக்கைகள் குறித்த எங்கள் கருத்தில் இந்த இதர விவரங்கள் உள்ளடங்காது, மேலும் அது குறித்து நாங்கள் எந்த வகையான உறுதியான முடிவையும் தெரிவிக்க வில்லை, தெரிவிக்கவும் மாட்டோம்.

நிதிநிலை அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்கையில், மேலே இதர விவரங்கள் என குறிப்பிடப்பட்டவற்றைப் படிப்பதும், அவ்வாறு செய்யும்போது, இதர விவரங்கள் நிதிநிலை அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையில் நாங்கள் கண்டுபிடித்தவற்றுடன் குறிப்பிடத்தக்க அளவில் முரண்படுகிறதா அல்லது வேறுவிதமாகத் தவறாகக் கூறப்பட்டதாகத் தோன்றுகிறதா என்பதைக் கருத்தில் கொள்வதும் எங்கள் பொறுப்பாகும்.

இந்தத் தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்கு முன்னர் நாங்கள் பெற்ற இதர விவரங்களில் குறிப்பிடத்தக்க அளவிலான விவரப்பிழைகள் இருப்பதாக நாங்கள் செய்த தணிக்கையின் அடிப்படையில் முடிவு செய்தால், அந்த உண்மையை நாங்கள் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் தகவல் தெரிவிக்க எதுவும் இல்லை.

நாங்கள் இதர விவரங்களைப் படிக்கும்போது, அதில் ஒரு குறிப்பிடத்தக்க அளவிலான தவறான கூற்று இருப்பதாக முடிவு செய்தால், அதை நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுக்குத் தெரிவித்து, SSA-க்களின்படி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## நிதிநிலை அறிக்கைகள் தொடர்பில் நிர்வாகம் மற்றும் இயக்குநர்களின் பொறுப்புகள்

இந்த நிதிநிலை அறிக்கைகள், சட்டத்துக்கும் SFRS(I)s தரங்களுக்கும் ஏற்றபடி தயாரிக்கப்பட்டு உண்மையான மற்றும் நியாயமான கருத்தை வழங்கும் வகையில் படைக்கப்படுவதற்கு நிர்வாகமே பொறுப்பாகும். அத்துடன், அங்கீகரிக்கப்படாத பயன்பாடு அல்லது விற்பனையில் ஏற்படும் இழப்புகளுக்கு எதிராகச் சொத்துகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்குப் போதுமான உள் கணக்கியல் கட்டுப்பாடுகளின் அமைப்பை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் நிர்வாகமே பொறுப்பாகும்; மேலும் பரிவர்த்தனைகள் முறையாக அங்கீகரிக்கப்பட்டு, உண்மையான மற்றும் நியாயமான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கவும் சொத்துகளின் கணக்கைப் பராமரிக்கவும் அவசியமான வகையில் அவை பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதும் இதில் அடங்கும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில், குழுமத்தால் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனமாகத் தொடரும் திறனை மதிப்பிடுதல், பொருத்தம் எனில் இது தொடர்புடைய விவகாரங்களை வெளிப்படுத்துதல் ஆகியவை நிர்வாகத்தின் பொறுப்பாகும், மற்றும் குழுமம் அதனைப் பணமாக்க முடிவெடுத்தாலோ அல்லது செயல்பாடுகளை நிறுத்த விரும்பினாலோ அல்லது அப்படிச் செய்வது தவிர வேறு எந்த மாற்று வழியும் இல்லாவிட்டால் ஒழிய, தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனம் என்ற அடிப்படையிலான கணக்கியலைப் பயன்படுத்துதல் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இயக்குநர்களின் பொறுப்புகளில் குழுமத்தின் நிதிநிலை அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடுவதும் அடங்கும்.

## நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கை தொடர்பில் தணிக்கையாளரின் பொறுப்புகள்

நிதி அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவிலான தவறான தகவல்கள் இல்லாமல் இருக்கின்றனவா என்பது குறித்த நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய ஒரு தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால், SSA-க்களின்படி நடத்தப்படும் ஒரு தணிக்கை எப்போதும் ஒரு குறிப்பிடத்தக்க அளவிலான தவறான தகவல்களைக் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்காது. தவறான அறிக்கைகள் மோசடி அல்லது பிழையிலிருந்து எழலாம், மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்படும் பயனர்களின் பொருளாதார முடிவுகளைப் பாதிக்கக்கூடும் என்று நியாயமாக எதிர்பார்க்கப்பட்டால் அவை முக்கியமானதாகக் கருதப்படுகின்றன.

SSA-க்களின்படி தணிக்கையின் ஒரு பகுதியாக, நாங்கள் நிபுணத்துவ மதிப்பீட்டைப் பயன்படுத்தி, நிபுணத்துவ ஐயவாதத்தை நிலைநாட்டினோம். மேலும், நாங்கள்:

- மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவிலான தவறான தகவலளித்தலுக்கான அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிட்டு, அந்த அபாயங்களுக்கு ஏற்ப தணிக்கை நடைமுறைகளை வடிவமைத்துச் செயல்படுத்தி, மேலும் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்கப் போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெறவேண்டும். மோசடியின் விளைவாக ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்க அளவிலான தவறான அறிக்கையைக் கண்டறியாததன் ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் அபாயத்தை விட அதிகமாகும், ஏனெனில் மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ்கூற்று அல்லது உள்-கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவை உள்ளடங்கியிருக்கலாம்.
- சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்க, தணிக்கைக்குப் பொருத்தமான உள் கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறவேண்டும், ஆனால் குழுமத்தின் உள் கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றி கருத்து தெரிவிப்பது இதன் நோக்கமன்று.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் அது தொடர்பான வெளிப்படுத்தல்களின் நியாயத்தன்மையையும் மதிப்பிட வேண்டும்.
- தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்க வேண்டும், அத்தோடு பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில் குழுமம் தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்து குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால் நிதி அறிக்கைகளில் இடம் பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டும் அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால் எங்கள் கருத்தைத் திருத்தியமைக்க வேண்டும். எங்களது தீர்மானங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கை தேதிவரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும் வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை இழப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்தப் படைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பிட வேண்டும். நிதிநிலை அறிக்கைகள் அடிப்படைப் பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை நியாயமான முறையில் காண்பிக்கின்றனவா என்பதையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.
- குழுமத்தின் நிதி அறிக்கைகள் குறித்த கருத்தை உருவாக்குவதற்கான அடிப்படையாக, குழுமத்திற்குள் உள்ள நிறுவனங்கள் அல்லது வணிக அலகுகளின் நிதித் தகவல் தொடர்பான போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெற, குழுமத் தணிக்கையைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். குழுமத் தணிக்கையின் திசை, மேற்பார்வை மற்றும் செயல்திறனுக்கு நாங்கள் பொறுப்பு. எங்கள் தணிக்கைக் கருத்துக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பாவோம்.

எங்கள் தணிக்கையின் போது நாங்கள் அடையாளம் காணும் உள் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைப்பாடுகள் உள்ளிட்ட விவரங்களையும், திட்டமிடப்பட்ட தணிக்கை நோக்கம் மற்றும் நேரம் குறித்தும், குறிப்பிடத்தக்க தணிக்கைக் கண்டுபிடிப்புகள் குறித்தும் இயக்குநர்களிடம் நாங்கள் தெரியப்படுத்துவோம்.

சுயேச்சைத்தன்மை தொடர்பான பொருத்தமான நெறிமுறைத் தேவைகளுக்கு நாங்கள் இணங்கியுள்ளோம் என்ற அறிக்கையையும் இயக்குநர்களுக்கு வழங்குகிறோம், மேலும் எங்கள் சுயேச்சைத்தன்மையையும், பொருந்துமாயின் அது சார்ந்த பாதுகாப்புகளையும் பாதிக்கக்கூடும் என நியாயமாகக் கருதப்படும் அனைத்து உறவுகளையும் மற்றும் இதர விவகாரங்களையும் அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்லது பாதுகாப்புகள் பற்றி அவர்களுடன் தொடர்புகொள்கிறோம். இயக்குநர்களிடம் தெரியப்படுத்தும் விவகாரங்களிலிருந்து, நடப்புக் காலக்கட்டத்தின் நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களை நாங்கள் அடையாளம் காண்கிறோம், எனவே அவை முக்கியத் தணிக்கை விவகாரங்களாகும். சட்டம் அல்லது ஒழுங்குமுறை இந்த விவகாரத்தைப் பற்றிய பொது வெளிப்பாட்டைத் தடுத்தால் ஒழிய அல்லது மிக அரிதாக, எங்கள் அறிக்கையில் ஒரு விவகாரத்தைத் வெளியிடுவதால் பொது நலனைவிட பாதிப்பே ஏற்படக்கூடும் என்ற நியாயமான எதிர்பார்ப்பால், தெரிவிக்கக்கூடாது என்று நாங்கள் தீர்மானித்தால் ஒழிய, இந்த விவகாரங்களை எங்கள் தணிக்கையாளர் அறிக்கையில் விவரிக்கிறோம்.

## இதரச் சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்த அறிக்கை

எங்கள் கருத்துப்படி, நாங்கள் தணிக்கையாளர்களாக இருக்கும் நிறுவனமும் சிங்கப்பூரில் ஒருங்கிணைக்கப்பட்ட துணை நிறுவனங்களும் சட்டப்படி பராமரிக்கப்பட வேண்டிய கணக்கியல் மற்றும் இதரப் பதிவுகளை சட்ட விதிகளின்படி முறையாகப் பராமரிக்கின்றன.

இந்தச் சுயேச்சைத் தணிக்கையாளர் அறிக்கையை அளிக்கக் காரணமான தணிக்கையில் ஈடுபட்டுள்ள கூட்டாளி யூரா மஹிந்த்ரூ ஆவார்.

Pricewaterhouse Coopers LLP

பிரைஸ்வாட்டர்ஹௌஸ்கூப்பர்ஸ் எல்எல்பி
பொதுக் கணக்காளர்கள் மற்றும் பட்டயக் கணக்காளர்கள்
சிங்கப்பூர், 7 பிப்ரவரி 2025

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட வருவாய் அறிக்கை

**31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| $ மில்லியன்களில் | 2024 | 2023 |
|---|---|---|
| வட்டி மற்றும் அதனை ஒத்த வருமானம் | **30,927** | 27,862 |
| வட்டிச் செலவினம் | **16,503** | 14,220 |
| **நிகர வட்டி வருமானம்** | **14,424** | 13,642 |
| | | |
| நிகரக் கட்டணமும் தரகு வருமானமும் | **4,168** | 3,366 |
| நிகர வர்த்தக வருமானம் | **3,381** | 2,866 |
| முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் மூலம் நிகர வருமானம் | **163** | 217 |
| இதர வருமானம் | **161** | 71 |
| **வட்டியில்லா வருமானம்** | **7,873** | 6,520 |
| | | |
| **மொத்த வருமானம்** | **22,297** | 20,162 |
| | | |
| ஊழியர் அனுகூலங்கள் | **5,594** | 5,053 |
| இதரச் செலவினங்கள் | **3,424** | 3,238 |
| **மொத்தச் செலவினங்கள்** | **9,018** | 8,291 |
| | | |
| **கடன்தீர் நிதி சேர்த்தல் மற்றும் ஒதுக்குகளுக்கு முன்வரும் வருமானம்** | **13,279** | 11,871 |
| கண்கூடற்ற சொத்துகளின் கடன்தீர் நிதி சேர்த்தல் | **23** | 9 |
| கடன் மற்றும் இதர இழப்புகளுக்கான ஒதுக்கீடு | **622** | 590 |
| **கடன்தீர் நிதி சேர்த்தல் மற்றும் ஒதுக்குகளுக்குப் பின்வரும் லாபம்** | **12,634** | 11,272 |
| கூட்டு நிறுவனங்கள், கூட்டு முயற்சிகளின் லாபங்கள் அல்லது நட்டங்களின் பங்கு | **250** | 214 |
| **வரிக்கு முந்தைய லாபம்** | **12,884** | 11,486 |
| வருமானவரிச் செலவினம் | **1,594** | 1,423 |
| **நிகர லாபம்** | **11,290** | 10,063 |
| | | |
| இவற்றுக்குரியவர்கள்: | | |
| **தாய்நிறுவனத்தின் பங்குதாரர்கள்** | **11,289** | 10,062 |
| கட்டுப்பாடில்லாத உரிமையுடையோர் | **1** | 1 |
| | **11,290** | 10,063 |
| | | |
| சாதாரணப் பங்கு ஒன்றின் அடிப்படை மற்றும் ரொக்கமாக்கப்பட்ட வருமானம்[(a)] ($) | **3.94** | 3.52 |

*(a) ஒரு பங்குக்கான தரவுக் கணக்கீட்டிற்குப் பயன்படுத்தப்படும் சாதாரணப் பங்குகளின் சராசரி எடையிடப்பட்ட எண்ணிக்கை, 26 ஏப்ரல் 2024 அன்று வெளியிடப்பட்ட ஊக்கத்தொகைப் பங்குகளுக்காக, ஊக்கத்தொகை வெளியீடு 1 ஜனவரி 2023 அன்று நிகழ்ந்தது போல் பின்னோக்கிப் பரிசீலித்து சரிசெய்யப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான, ஒரு சாதாரணப் பங்குக்கான அடிப்படை மற்றும் நீர்த்த வருவாய் அதற்கேற்றவாறு திருத்தப்பட்டுள்ளது.*

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன.*

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை

**31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| $ மில்லியன்களில் | 2024 | 2023 |
|---|---|---|
| **நிகர லாபம்** | **11,290** | 10,063 |
| **இதர விரிவான வருமானம்:** | | |
| **வருமான அறிக்கையில் பிற்பாடு மறுப்பகுப்பு செய்யப்படக்கூடிய இனங்கள்:** | | |
| வெளிநாட்டுச் செயல்பாடுகளின் நாணயமாற்று வேறுபாடுகள் | **518** | (509) |
| இணை நிறுவனங்களின் இதர விரிவான வருமானத்தின் பங்கு | **(7)** | (1) |
| இதர விரிவான வருமானம் மூலமாக நியாய விலையில் வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகளின் லாபங்கள்/(நட்டங்கள்) | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீட்டு லாபங்கள் | **388** | 810 |
| வருமான அறிக்கைக்கு மாற்றப்பட்ட லாபங்கள் | **(76)** | (89) |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பான வரிவிதிப்பு | **25** | (55) |
| ரொக்கப்புழக்க பாதுகாப்பு இயக்கங்கள் | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீட்டு லாபங்கள் | **913** | 967 |
| வருமான அறிக்கைக்கு மாற்றப்பட்ட லாபங்கள்/(நட்டங்கள்) | **(285)** | 237 |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பான வரிவிதிப்பு | **(3)** | (84) |
| **வருமான அறிக்கையில் பிற்பாடு மறுப்பகுப்பு செய்யப்படாத இனங்கள்:** | | |
| இதர விரிவான வருமானம் (நிகர வரி) மூலம் நியாய மதிப்பில் வகைப்படுத்தப்பட்ட பங்குமுதல் பத்திரங்களின் மீதான லாபங்கள்/ (நட்டங்கள்) | **110** | (181) |
| நியாயமான மதிப்பிலான (நிகர வரி) நிதிப் பொறுப்புகளின் சொந்தக் கடன் இடரிலிருந்து எழும் நியாய மதிப்பு மாற்றம் | **(12)** | (108) |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களின் மறுஅளவீட்டு நட்டங்கள் (நிகர வரி) | **(1)** | (8) |
| **இதர விரிவான வருமானம், நிகர வரி** | **1,570** | 979 |
| **மொத்த விரிவான வருமானம்** | **12,860** | 11,042 |
| இவற்றுக்குரியவர்கள்: | | |
| **தாய்நிறுவனத்தின் பங்குதாரர்கள்** | **12,860** | 11,047 |
| கட்டுப்பாடில்லாத உரிமையுடையோர் | **–** | (5) |
| | **12,860** | 11,042 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன.*

**டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்**

# தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலை அறிக்கை

**31 டிசம்பர் 2024 நிலவரப்படியானது**

| $ மில்லியன்களில் | 2024 | 2023 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| மத்திய வங்கிகளில் ரொக்கம், இருப்புகள் | **58,646** | 50,213 |
| அரசாங்கப் பத்திரங்களும் கருவூல நிதிக்கருவிகளும் | **81,539** | 70,565 |
| வங்கிகளிலிருந்து வர வேண்டியவை | **80,415** | 67,461 |
| வழிப்பொருள் சொத்துகள் | **27,897** | 22,700 |
| வங்கி மற்றும் நிறுவன மூலதனப் பத்திரங்கள் | **105,053** | 81,735 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முன்பணங்களும் | **430,594** | 416,163 |
| இதரச் சொத்துகள் | **29,757** | 17,975 |
| கூட்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகள் | **3,073** | 2,487 |
| சொத்துகள், இதர நிலையான சொத்துகள் | **3,873** | 3,689 |
| நன்மதிப்பு மற்றும் கண்கூடற்ற சொத்துகள் | **6,372** | 6,313 |
| **மொத்தச் சொத்துகள்** | **827,219** | 739,301 |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் சேர வேண்டியவை | **64,175** | 46,704 |
| வாடிக்கையாளர்களின்  வைப்புத்தொகையும் இருப்புகளும் | **561,730** | 535,103 |
| வழிப்பொருள் பொறுப்புகள் | **26,670** | 23,457 |
| இதரப் பொறுப்புகள் | **36,643** | 22,392 |
| இதரக் கடன் பத்திரங்கள் | **67,850** | 48,079 |
| துணைப் பருவக் கடன் கடன்கள் | **1,318** | 1,319 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **758,386** | 677,054 |
| **நிகரச் சொத்துகள்** | **68,833** | 62,247 |
| **பங்குமுதல்** | | |
| பங்கு மூலதனம் | **11,537** | 11,604 |
| இதரப் பங்குமுதல் கருவிகள் | **2,392** | 2,392 |
| இதரக் காப்புநிதிகள் | **1,694** | (23) |
| வருமானக் காப்புநிதிகள் | **53,163** | 48,092 |
| **பங்குதாரர்களின் நிதிகள்** | **68,786** | 62,065 |
| கட்டுப்பாடில்லாத உரிமையுடையோர் | **47** | 182 |
| **மொத்தப் பங்குமுதல்** | **68,833** | 62,247 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன.*

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை

**31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| | நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு உரியவை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| $ மில்லியன்களில் | பங்கு மூலதனம் | இதரப் பங்குமுதல் கருவிகள் | இதரக் காப்புநிதி | வருமானக் காப்புநிதி | பங்குதாரர் நிதிகள் | கட்டுப்பாடு இல்லாத உரிமை | மொத்தப் பங்கு முதல் |
| **2024** | | | | | | | |
| ஜனவரி 1-இல் இருப்பு | **11,604** | **2,392** | **(23)** | **48,092** | **62,065** | **182** | **62,247** |
| கருவூலப் பங்குகளை வாங்குதல் | **(213)** | **–** | **–** | **–** | **(213)** | **–** | **(213)** |
| நன்னிலையிலுள்ள பங்குரிமை கைகொள்ளலுக்கான பங்கு விலைதாழ்ச்சித் திட்ட காப்புநிதி | **146** | **–** | **(149)** | **–** | **(3)** | **–** | **(3)** |
| பங்கு அடிப்படையிலான கட்டணச் செலவு | **–** | **–** | **177** | **–** | **177** | **–** | **177** |
| பங்குதாரர்களுக்குச் செலுத்திய லாப ஈவு[(a)] | **–** | **–** | **–** | **(6,083)** | **(6,083)** | **–** | **(6,083)** |
| கட்டுப்பாடில்லாத உரிமையுடையோரில் மாற்றம் | **–** | **–** | **–** | **–** | **–** | **(152)** | **(152)** |
| இதர மாற்றங்கள் | **–** | **–** | **–** | **(17)** | **(17)** | **17** | **–** |
| நிகர லாபம் | **–** | **–** | **–** | **11,289** | **11,289** | **1** | **11,290** |
| இதர விரிவான வருமானம் | **–** | **–** | **1,689** | **(118)** | **1,571** | **(1)** | **1,570** |
| டிசம்பர் 31-இல் இருப்பு | **11,537** | **2,392** | **1,694** | **53,163** | **68,786** | **47** | **68,833** |
| **2023** | | | | | | | |
| ஜனவரி 1-இல் இருப்பு | 11,495 | 2,392 | (1,347) | 44,347 | 56,887 | 185 | 57,072 |
| கருவூலப் பங்குகளை வாங்குதல் | (20) | – | – | – | (20) | – | (20) |
| நன்னிலையிலுள்ள பங்குரிமை கைகொள்ளலுக்கான பங்கு விலைதாழ்ச்சித் திட்ட காப்புநிதி | 129 | – | (132) | – | (3) | – | (3) |
| பங்கு அடிப்படையிலான கட்டணச் செலவு | – | – | 178 | – | 178 | – | 178 |
| பங்குதாரர்களுக்குச் செலுத்திய லாப ஈவு[(a)] | – | – | – | (6,013) | (6,013) | – | (6,013) |
| கட்டுப்பாடில்லாத உரிமையுடையோருக்குச் செலுத்திய லாப ஈவு | – | – | – | – | – | (7) | (7) |
| துணை நிறுவனத்தில் உள்ள கட்டுப்பாட்டு உரிமைகளை விற்றல் | – | – | – | – | – | (2) | (2) |
| இதர மாற்றங்கள் | – | – | (61) | 50 | (11) | 11 | – |
| நிகர லாபம் | – | – | – | 10,062 | 10,062 | 1 | 10,063 |
| இதர விரிவான வருமானம் | – | – | 1,339 | (354) | 985 | (6) | 979 |
| டிசம்பர் 31-இல் இருப்பு | 11,604 | 2,392 | (23) | 48,092 | 62,065 | 182 | 62,247 |

*(a) பங்குமுதலாக வகைப்படுத்தப்பட்ட மூலதனப் பத்திரங்களுக்குச் செலுத்தப்பட்ட பகிர்வுகளை உள்ளடக்கியது (2024: $84 மில்லியன்; 2023: $84 மில்லியன்)*

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கையிடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை

**31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| $ மில்லியன்களில் | 2024 | 2023 |
|---|---|---|
| **செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வரும் ரொக்கப்புழக்கங்கள்** | | |
| வரிக்கு முந்தைய லாபம் | **12,884** | 11,486 |
| **ரொக்கமற்ற அல்லது இதர இனங்களுக்கான சரிகட்டல்கள்:** | | |
| கடன் மற்றும் இதர இழப்புகளுக்கான ஒதுக்குகள் | **622** | 590 |
| கண்கூடற்ற சொத்துகளின் கடன்தீர் நிதிசேர்த்தல் | **23** | 9 |
| சொத்துகள் மற்றும் இதரச் சொத்துகளில் தேய்மானம் | **806** | 737 |
| கூட்டு நிறுவனங்கள், கூட்டு முயற்சிகளின் லாபங்கள் அல்லது நட்டங்களின் பங்கு | **(250)** | (214) |
| ஒரு துணை நிறுவனத்தின் கட்டுப்பாட்டுரிமை விற்பனையில் நிகர லாபம் | **–** | (18) |
| விற்பனையில் வந்த நிகர லாபம், சொத்துகள் மற்றும் இதரச் சொத்துகளைத் தள்ளுபடி செய்தலின் நிகரம் | **(85)** | 19 |
| முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் மூலம் நிகர லாபம் | **(163)** | (217) |
| பங்கு அடிப்படையிலான கட்டணச் செலவு | **177** | 178 |
| துணைப் பருவக் கடன்களின் வட்டிச் செலவுகள் | **43** | 82 |
| குத்தகைக் கடன்களின் வட்டிச் செலவுகள் | **23** | 19 |
| செயல்பாட்டுச் சொத்து, பொறுப்புகளில் மாற்றங்களுக்கு முன் லாபம் | **14,080** | 12,671 |
| **இவற்றில் அதிகரிப்பு/(குறைவு):** | | |
| வங்கிகளுக்குச் சேர வேண்டியவை | **15,898** | 8,804 |
| வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகையும் இருப்பும் | **23,075** | (6) |
| வழிப்பொருள் மற்றும் இதரப் பொறுப்புகள் | **19,026** | (19,119) |
| இதரக் கடன் பத்திரங்களும் கைமாற்றுகளும் | **19,485** | 1,150 |
| **இவற்றில் அதிகரிப்பு/(குறைவு):** | | |
| மத்திய வங்கிகளுடனான வரையறுக்கப்பட்ட இருப்புகள் | **(997)** | (223) |
| அரசாங்கப் பங்குப் பத்திரங்களும் கருவூல நிதிக்கருவிகளும் | **(10,000)** | (6,180) |
| வங்கிகளிலிருந்து வர வேண்டியவை | **(11,830)** | (8,152) |
| வங்கி மற்றும் நிறுவன மூலதனப் பத்திரங்கள் | **(22,016)** | (6,926) |
| வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் | **(13,582)** | 2,156 |
| வழிப்பொருள் மற்றும் இதரச் சொத்துகள் | **(16,360)** | 22,553 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | **(1,438)** | (1,319) |
| **செயல்பாட்டு நடவடிக்கைகளால் கிடைத்த நிகர ரொக்கம் (1)** | **15,341** | 5,409 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து வரும் ரொக்கப்புழக்கங்கள்** | | |
| கூட்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளிலிருந்து வரும் லாப ஈவு | **122** | 81 |
| கூட்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளில் பங்களித்த மூலதனம் | **(517)** | (124) |
| கூட்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளிலிருந்து வரும் மூலதன வருவாய் | **86** | – |
| சொத்துகள், இதர நிலையான சொத்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் | **134** | 2 |
| சொத்துகள் மற்றும் பிற நிலையான சொத்துகளை வாங்குதல் | **(916)** | (718) |
| துணை நிறுவன விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானம் | **–** | 49 |
| சிட்டி தைவான் நுகர்வோர் வங்கி வணிகத்தைக் கையகப்படுத்தியதன் மூலம் நிகர ரொக்க வருமானம் | **–** | 1,437 |
| கட்டுப்பாடற்ற உரிமையிலிருந்து துணை நிறுவனத்தில் கூடுதல் பங்குகளை வாங்குதல் | **(152)** | – |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த / நிகர ரொக்கம் (பயன்படுத்தப்பட்டது) (2)** | **(1,243)** | 727 |
| **நிதியளிப்பு நடவடிக்கைகளிலிருந்து வரும் ரொக்கப்புழக்கங்கள்** | | |
| துணைப் பருவக் கடன்கள் மீட்பு | **–** | (3,057) |
| துணைப் பருவக் கடன்கள் மீட்பில் செலுத்தப்பட்ட வட்டி | **(43)** | (92) |
| கருவூலப் பங்குகளை வாங்குதல் | **(213)** | (20) |
| நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் லாப ஈவு[(a)] | **(6,083)** | (6,013) |
| கட்டுப்பாடில்லாத பாத்தியதையுடையோருக்குச் செலுத்திய லாப ஈவு | **–** | (7) |
| குத்தகைக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் | **(265)** | (243) |
| **நிதியளிப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர ரொக்கம் (3)** | **(6,604)** | (9,432) |
| **நாணயமாற்று மாறுதல்களைச் சரிகட்டுதல் (4)** | **(17)** | (805) |
| **ரொக்கம் மற்றும் ரொக்கத்துக்குச் சமமானவற்றில் நிகர மாற்றம் (1)+(2)+(3)+(4)** | **7,477** | (4,101) |
| **ஜனவரி 1-இல் ரொக்கம் மற்றும் ரொக்கத்துக்குச் சமமானவை** | **39,875** | 43,976 |
| **டிசம்பர் 31 -இல் ரொக்கம் மற்றும் ரொக்கத்துக்குச் சமமானவை** | **47,352** | 39,875 |

*(a) பங்குமுதலாக வகைப்படுத்தப்பட்ட மூலதனப் பத்திரங்களில் செலுத்தப்படும் விநியோகங்களை உள்ளடக்கியது.*

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன.*

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# இதர விவரங்கள்

## 1. மூலதன வளம்

| $ மில்லியன்களில் | 2024 | 2023 |
|---|---|---|
| பொதுப் பங்குமுதல் படி 1 மூலதனம் | **59,993** | 53,789 |
| படி 1 மூலதனம் | **62,386** | 56,182 |
| மொத்த மூலதனம் | **65,601** | 59,306 |
| இடர்கோள் மதிப்பிடப்பட்ட சொத்துகள் | **352,002** | 368,363 |
| **மூலதன வள விகிதங்கள்[(a)(b)] (%)** | | |
| பொதுப் பங்குமுதல் படி 1 (CET-1) | **17.0** | 14.6 |
| படி 1 | **17.7** | 15.3 |
| மொத்தம் | **18.6** | 16.1 |
| படிப்படியாக முழுமைபெற்ற CET-1[(c)] | **15.1** | NA |

*NA பொருந்தாது*

*(a) "ஆண்டுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தணிக்கையாளர்களின் அறிக்கை மற்றும் கூடுதல் தகவல்" தொடர்பான MAS அறிவிப்பு 609-ன்படி, வங்கிக் குழுமத்தின் மூலதன வள விகிதங்கள் வெளிப்புறத்தில் வரையறுக்கப்பட்ட உத்தரவாத மதிப்பாய்வுக்கு உட்பட்டுள்ளன.*

*(b) 31 டிசம்பர் 2024 நிலவரப்படி மூலதன வள விகிதங்கள், 1 ஜூலை 2024 முதல் இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் செயல்படுத்தப்பட்ட பேசல் III சீர்திருத்தங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டன.*

*(c) 1 ஜனவரி 2029 அன்று முழுவதும் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டபோது, பேசல் III சீர்திருத்தங்களின் ஒழுங்குமுறை 72.5% என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டன.*

## 2. லாப ஈவுகள்

31 டிசம்பர் 2024 அன்று முடிவடைந்த நிதியாண்டுக்கு, இயக்குநர்கள் ஒவ்வொரு DBSH சாதாரணப் பங்கிற்கும் 60 காசுகள் இறுதி படி 1 வரி விலக்கு ஈவுத்தொகையைப் பரிந்துரைத்துள்ளனர், இது 28 மார்ச் 2025 அன்று நடைபெறும் வருடாந்திரப் பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

நிதியாண்டில் இடைக்காலத்தில் வழங்கப்பட்ட லாப ஈவுத்தொகைகளுடன் சேர்த்து, முன்மொழியப்பட்ட லாப ஈவுத்தொகைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| $ மில்லியன்களில் | 2024 | 2023 |
|---|---|---|
| **DBSH சாதாரணப் பங்குகள்[(a)]** | | |
| இடைக்கால 1 படி வரி விலக்கு லாப ஈவுத்தொகைகள்: $1.62 (2023: $1.26) | **4,604** | 3,557 |
| இறுதி 1 படி வரி விலக்கு லாப ஈவுத்தொகைகள்: $0.60 (2023: $0.49) | **1,704** | 1,395 |
| | **6,308** | 4,952 |

*(a) 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கு முந்தைய லாப ஈவுத்தொகைகள், 7 பிப்ரவரி 2024 அன்று அறிவிக்கப்பட்ட 10 க்கு 1 ஊக்கத்தொகை வெளியீட்டிற்காகச் சரிசெய்யப்பட்டன.*

## 3. ஊக்கத்தொகை வெளியீடு

26 ஏப்ரல் 2024 அன்று, நிறுவனம் வைத்திருக்கும் ஒவ்வொரு 10 சாதாரணப் பங்குகளுக்கும் ஓர் ஊக்கத்தொகைப் பங்கு என்ற அடிப்படையில், இலவசமாகவும் இருப்புகளை மூலதனமாக்காமலும் 258 மில்லியன் ஊக்கத்தொகைப் பங்குகளை வெளியிட்டது. ஊக்கத்தொகைப் பங்குகள் 31 டிசம்பர் 2024 அன்று முடிவடைந்த நிதியாண்டின் முதல் இடைக்கால லாப ஈவுத்தொகை முதல் லாப ஈவுத்தொகை செலுத்த தகுதி பெறுகின்றன.

## 4. மூன்று பில்லியன் சிங்கப்பூர் டாலர் பங்குகளை திரும்பப் பெறும் திட்டத்தை நிறுவுதல்

7 நவம்பர் 2024 அன்று, குழுமம் $3 பில்லியன் மதிப்புள்ள புதிய பங்கு திரும்பப் பெறும் திட்டத்தை நிறுவுவதாக அறிவித்தது. இந்தத் திட்டத்தின் கீழ், பங்குகள் திறந்த சந்தையில் வாங்கப்பட்டு ரத்து செய்யப்படும். மறு-வாங்கல் நிர்வாகத்தின் விருப்பப்படியும் சந்தை நிலைமைகளுக்கு உட்பட்டும் மேற்கொள்ளப்படும். மறு-வாங்கல் செய்யப்பட்ட DBSH பங்குகள் ரத்து செய்யப்படும் என முதல் முறையாக இந்தத் திட்டம் குறிக்கிறது. இந்தத் திட்டம் ஊழியர்களின் பங்குத் திட்டங்களைக் கைகொள்வதற்காக அவ்வப்போது மேற்கொள்ளப்படும் பங்கு திரும்பப் பெறுதல்களுக்கு மேலாகும். 31 டிசம்பர் 2024 நிலவரப்படி இந்தத் திட்டத்தின் கீழ் பங்கு திரும்பப் பெறவில்லை.

டிபிஎஸ் பேங்க் லிமிடெட்

# தணிக்கையிடப்பட்ட வருவாய் அறிக்கை

**31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| | வங்கி | |
|---|---|---|
| **$ மில்லியன்களில்** | **2024** | **2023** |
| வட்டி மற்றும் அதனை ஒத்த வருமானம் | **24,548** | 22,231 |
| வட்டிச் செலவினம் | **14,219** | 12,350 |
| நிகர வட்டி வருமானம் | **10,329** | 9,881 |
| நிகரக் கட்டணமும் தரகு வருமானமும் | **2,769** | 2,365 |
| நிகர வர்த்தக வருமானம் | **2,662** | 2,450 |
| முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் மூலம் நிகர வருமானம் | **123** | 174 |
| இதர வருமானம் | **1,377** | 1,068 |
| **வட்டியில்லா வருமானம்** | **6,931** | 6,057 |
| **மொத்த வருமானம்** | **17,260** | 15,938 |
| ஊழியர் அனுகூலங்கள் | **3,484** | 3,153 |
| இதரச் செலவினங்கள் | **2,154** | 2,146 |
| **மொத்தச் செலவினங்கள்** | **5,638** | 5,299 |
| **ஒதுக்குகளுக்கு முன்வரும் வருமானம்** | **11,622** | 10,639 |
| கடன் மற்றும் இதர இழப்புகளுக்கான ஒதுக்குகள் | **76** | 379 |
| **வரிக்கு முந்தைய லாபம்** | **11,546** | 10,260 |
| வருமானவரிச் செலவினம் | **1,179** | 1,057 |
| **பங்குதாரருக்குரிய நிகர லாபம்** | **10,367** | 9,203 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன.*

டிபிஎஸ் பேங்க் லிமிடெட்

# தணிக்கையிடப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை

**31 டிசம்பர் 2024-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| $ மில்லியன்களில் | வங்கி 2024 | 2023 |
|---|---|---|
| **நிகர லாபம்** | **10,367** | 9,203 |
| **இதர விரிவான வருமானம்:** | | |
| **வருமான அறிக்கையில் பிற்பாடு மறுப்பகுப்பு செய்யப்படக்கூடிய இனங்கள்:** | | |
| வெளிநாட்டுச் செயல்பாடுகளின் நாணயமாற்று வேறுபாடுகள் | **270** | (179) |
| இதர விரிவான வருமானம் மூலமாக நியாய விலையில் வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகளின் லாபங்கள்/(நட்டங்கள்) | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீட்டு லாபங்கள் | **286** | 652 |
| வருமான அறிக்கைக்கு மாற்றப்பட்ட லாபங்கள் | **(43)** | (66) |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பான வரிவிதிப்பு | **37** | (34) |
| ரொக்கப்புழக்க பாதுகாப்பு இயக்கங்கள் | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீட்டு லாபங்கள் | **706** | 775 |
| வருமான அறிக்கைக்கு மாற்றப்பட்ட லாபங்கள்/(நட்டங்கள்) | **(229)** | 202 |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பான வரிவிதிப்பு | **26** | (46) |
| **வருமான அறிக்கையில் பிற்பாடு மறுப்பகுப்பு செய்யப்படாத இனங்கள்:** | | |
| இதர விரிவான வருமானம் (நிகர வரி) மூலம் நியாய மதிப்பில் வகைப்படுத்தப்பட்ட பங்குமுதல் பத்திரங்களின் மீதான லாபங்கள்/ (நட்டங்கள்) | **66** | (180) |
| நியாயமான மதிப்பிலான (நிகர வரி) நிதிப் பொறுப்புகளின் சொந்தக் கடன் இடரிலிருந்து எழும் நியாய மதிப்பு மாற்றம் | **(13)** | (108) |
| வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களின் மறுஅளவீட்டு நட்டங்கள் (நிகர வரி) | **(1)** | (3) |
| **இதர விரிவான வருமானம், நிகர வரி** | **1,105** | 1,013 |
| **பங்குதாரருக்குரிய மொத்த விரிவான வருமானம்** | **11,472** | 10,216 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன.*

**டிபிஎஸ் பேங்க் லிமிடெட்**

# தணிக்கையிடப்பட்ட இருப்புநிலை அறிக்கை

**31 டிசம்பர் 2024 நிலவரப்படியானது**

| | வங்கி | |
|---|---|---|
| **$ மில்லியன்களில்** | **2024** | **2023** |
| **சொத்துகள்** | | |
| மத்திய வங்கிகளில் ரொக்கம், இருப்புகள் | **50,804** | 42,488 |
| அரசாங்கப் பத்திரங்களும் கருவூல நிதிக்கருவிகளும் | **53,381** | 48,083 |
| வங்கிகளிலிருந்து வர வேண்டியவை | **72,557** | 61,237 |
| வழிப்பொருள் சொத்துகள் | **24,316** | 21,446 |
| வங்கி மற்றும் நிறுவன மூலதனப் பத்திரங்கள் | **93,091** | 71,402 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முன்பணங்களும் | **329,205** | 321,902 |
| இதரச் சொத்துகள் | **24,707** | 12,163 |
| துணை நிறுவனங்களில் முதலீடு | **15,898** | 15,594 |
| துணை நிறுவனங்களிலிருந்து வர வேண்டியவை | **30,768** | 29,309 |
| பங்கு கைகொள் நிறுவனத்திலிருந்து வர வேண்டியவை | **1,486** | 1,474 |
| கூட்டு நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள் | **1,930** | 1,484 |
| சொத்துகள், இதர நிலையான சொத்துகள் | **1,982** | 1,978 |
| நன்மதிப்பு மற்றும் கண்கூடற்ற சொத்துகள் | **334** | 334 |
| **மொத்தச் சொத்துகள்** | **700,459** | 628,894 |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் சேர வேண்டியவை | **57,411** | 41,357 |
| வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகையும் இருப்புகளும் | **420,613** | 401,460 |
| வழிப்பொருள் பொறுப்புகள் | **23,487** | 21,728 |
| இதரப் பொறுப்புகள் | **29,181** | 15,711 |
| இதரக் கடன் பத்திரங்கள் | **62,367** | 40,992 |
| பங்கு கைகொள் நிறுவனத்துக்குச் சேர வேண்டியவை | **3,766** | 5,037 |
| துணை நிறுவனங்களுக்குச் சேர வேண்டியவை | **43,257** | 47,621 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **640,082** | 573,906 |
| **நிகரச் சொத்துகள்** | **60,377** | 54,988 |
| **பங்குமுதல்** | | |
| பங்கு மூலதனம் | **24,452** | 24,452 |
| இதரப் பங்குமுதல் கருவிகள் | **2,396** | 2,396 |
| இதரக் காப்புநிதிகள் | **(1,393)** | (2,610) |
| வருமானக் காப்புநிதிகள் | **34,922** | 30,750 |
| **பங்குதாரரின் நிதிகள்** | **60,377** | 54,988 |
| **நிகரப் பங்குமுதல்** | **60,377** | 54,988 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக அமைகின்றன.*

டிபிஎஸ் பேங்க் லிமிடெட்

# இதர விவரங்கள்

## 1. டிபிஎஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் மூலதன வளம் ( “வங்கிக் குழுமம்”)

| | வங்கிக் குழுமம் | |
|---|---|---|
| **மூலதன வள விகிதங்கள்[(a)(b)] (%)** | **2024** | **2023** |
| பொதுப் பங்குமுதல் படி 1 (CET-1) | **17.1** | 14.7 |
| படி 1 | **17.8** | 15.3 |
| மொத்தம் | **18.7** | 16.2 |
| படிப்படியாக முழுமைபெற்ற CET-1[(c)] | **15.2** | NA |

*NA பொருந்தாது*

*(a) “ஆண்டுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தணிக்கையாளர்களின் அறிக்கை மற்றும் கூடுதல் தகவல்” தொடர்பான MAS அறிவிப்பு 609-ன்படி, குழுமத்தின் மூலதன வள விகிதங்கள் வெளிப்புறத்தில் வரையறுக்கப்பட்ட உத்தரவாத மதிப்பாய்வுக்கு உட்பட்டுள்ளன.*

*(b) 31 டிசம்பர் 2024 நிலவரப்படி மூலதன வள விகிதங்கள், 1 ஜூலை 2024 முதல் இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் செயல்படுத்தப்பட்ட பேசல் III சீர்திருத்தங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டன.*

*(c) 1 ஜனவரி 2029 அன்று முழுவதும் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டபோது, பேசல் III சீர்திருத்தங்களின் ஒழுங்குமுறை 72.5% என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டன*